


ள் | திருவள்ளுவர் ஆண்டு 1979 மார்கழி 4
சென்னை, 18—12—48 | வீச்சு 17

# நீதி தேவன் மயக்கம்!

அண்ணா அவர்களின் அற்புதமான கலைப் படைப்பு "நீதி தேவன் மயக்கம்." தமிழ்நாட்டு பெர்னார்ட்ஷா என்று அண்ணா அவர்கள் இலக்கிய உலகில் உரிமையுடன் அழைக்கப்படுகிறாரே அது பொருத்தம்தானா என்று யாராவது கேட்டால் பொருத்தம் மிகப் பொருத்தம் மிக மிகப் பொருத்தம் என்றெல்லாம் நாம் பதில் சொல்லிக் கொண்டிருக்கத் தேவையில்லை. அப்படிக் கேட்பவரை மடமட வென அழைத்துக் கொண்டுபோய் "நீதி தேவன் மயக்கம்" நடைபெறும் கொட்டகையில் நிறுத்தினால் போதும்; சில நொடிகள் நாடகத்தைக் கண்டதும் அவர் தானே உணர்ந்து கொள்வார் அண்ணா தமிழ் நாட்டுப் பெர்னார்ட்ஷா என்பதில் சிறிதும் ஐயமில்லை என்பதை! மற்ற நாடகங்கள் கூடத் தேவையில்லை, நீதி தேவன் மயக்கம் ஒன்று போதும் அவருடைய பெர்னார்ட்ஷாத்தன்மையை அழகுற விளக்க.

"அதோ போகிறானே, அவனைப் பார்! அவன் இரக்கம் என்று ஒரு பொருள் இலா அரக்கன்!" என்று ஒருவர் யாரையாவது சுட்டிக் காட்டினால், அப்படிச் சுட்டிக் காட்டப்பட்டவரைப் பார்த்து யாருமே வெறுப்படைவது இயற்கை. ஆனால் பல சந்தர்ப்பங்களில் பலரால் இரக்கம் காட்ட முடிவதில்லை, இரக்கம் அவர்களுடைய உள்ளத்திலே இருந்தாலும்! இது ஏன் என்பதை எழிலுற விளக்கும் எழிலோவியமே "நீதி தேவன் மயக்கம்."

ஆனால் அந்த நீதி தேவன் மயக்கத்தை அல்ல நாம் இங்கே குறிப்பிடுவது, அது கற்பனைச் சித்திரம். ஆனால் நாம் இங்கே எடுத்துக்காட்டப்போவது உண்மையாகவே நாட்டில் அடிக்கடி நீதி தேவர்கள் மயங்கிவிடுகிறார்களே ஆள வந்த நம்பிகளின் அன்புக் கட்டளைகளை ஏற்றுக் கொண்டு, அந்த மயக்கத்தைத்தான்!

" ஹலோ மிஸ்டர்!"

"யெஸ்! ஹலோ பிரிமியர்! என்ன சமாசாரம்! இவ்வளவு காலையில்!"

"ஒன்றுமில்லை அந்தக் காட்டாவூர் கேஸ் உங்கள் விசாரணைக்கு வந்திருக்கிறதே, நீங்கள் கூட அடுத்த மாதம் 22ம் தேதிக்கு ஒத்திப் போட்டிருக்கிறீர்களே, அதான் ஏழு பேர் கூட்டத்தில் குழப்பம் உண்டுபண்ணி கல் எறிந்து கலாட்டா செய்ததாக வந்திருக்கிறதே அந்த வழக்குதான்.

"ஆமாம் இருக்குது என்ன வேண்டும்!"

"ஒன்றுமில்லை அதிலே இரண்டு பேர். நரசிம்மன், பூங்காவனம் என்று பெயர் இருக்கும். அவர்கள் நம்ம கட்சிக்காரர்கள். கொஞ்சம் அதிலிருந்து அவர்களை விலக்கிவிட வேண்டும்."

"அவர்களை மட்டும் விலக்கி விட்டால் நன்றாயிருக்குமா? அவர்கள் மீதுதான் அதிக 'சார்ஜ்' இருக்கிறது! மற்ற ஐவரும் அதிக குற்றம் ஒன்றும் செய்ததாகத் தெரியவில்லையே!"

"பரவாயில்லை! பாருங்கள் எப்படியாவது அட்ஜஸ்ட் செய்யுகிறீர்கள்! என்ன, நான் சொல்வது, சரிதானா?

"நீங்களே சொல்றபோது நான் என்ன சொல்ல இருக்குது? அப்படியே செய்துடறேன்!"

இதுபோல டெலிபோனில் அமைச்சருக்கும் மாஜிஸ்ட்ரேட்டுக்குமிடையே உரையாடல் நிகழ்வது அப்படியொன்றும் அபூர்வமான நிகழ்ச்சி அல்ல இன்றைய இந்தியாவில்! டெலிபோன் கருவி கேட்டுக்கேட்டுப் பழக்கப்பட்டுப்போன வாசகங்கள் என்றுகூட சொல்லி விடலாம் இவற்றை. உண்மையிலேயே சர்க்கார் இதுபோல நீதி தேவர்களுக்கு மயக்கத்தை உண்டு பண்ணி அற வழியிலிருந்து அவர்களைப் பிறழ்ந்து போகுமாறு செய்வது இன்றைய காங்கிரஸ் ஆட்சியின்கீழ் ஓரளவு சாதாரண சம்பவமாகவே மாறிவிட்டது.

நாம் பார்க்கிறோம் அடிக்கடி, நீதியின் பாதையில், சர்க்கார் குறுக்கிட்டு அநீதி புரிந்திடும் அக்கிரமத்தை. ஒரு கூட்டம் நடக்கும்,

(4-ம் பக்கம் பார்க்க)

நாடு $1\frac{1}{2}$ அணா. வெளிநாடு 2 அணா.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பிளவுகளே தவிர நாங்கள், ஜவஹர் சர்க்கார் எத்தகைய கருத்து கொண்டிருப்பினும் அந்தக் கருத்து எங்கள் போக்குக்கு நேர் மாருனதாக இருப்பினும் நெஞ்சில் பட்டதைப் பட்டாங்கு உரைத்திடும் அஞ்சாமைப் பண்பும் ஆண்மைத் திறமும் படைத்தவர்கள் என்று அவர்கள் சொல்லவில்லை! எப்படித்தான் சொல்ல முடியும் அவர்களால்!

"ஆய்வு குழுவினரின் விசாரணை வெறும் நாடகம்! மொழிவழி மாகாணப் பிரிவினை கூடாது என்பது முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுவிட்ட, முடிந்துபோன, சங்கதி. இந்த "முடிந்துபோன" சங்கதியை முடியாததுபோல நடித்துக்காட்டி, விசாரணைக் கமிஷனும் நிறுவிக் காட்டி, அவர்கள் ஒரு நான்கு மாத காலம் நாடெங்கும் சுற்றி கருத்துரைகளைத் தொகுப்பதுபோலவும் செய்துகாட்டி, அதன் பிறகு ஏதோ இவ்வளவு 'யோசனை'களையும் கூட்டிக் கழித்து தொகுத்து வகுத்து பெருக்கிச் சுருக்கி ஈவுத் தொகையையும் இறுதியில் கணித்துக் காட்டுவதுபோல ஓர் அறிக்கையையும் வெளியிட்டுக் காட்டியிருக்கிறார்கள்—இது மக்கள் கண்ணைத் துடைக்கும் ஏமாற்று வித்தை என்ற தோரணையில் பேசுகிறீரே நண்பரே இவ்வளவுக்கும் ஏதாவது ஆதாரம் உண்டா அல்லது எதையாவது சொல்லி மாற்றுக்கட்சி சர்க்காரை எப்போதுமே தாக்கவேண்டும் என்ற குரோத எண்ணத்தின் மீது எழுப்பப்பட்ட புனைந்துரைக் குமிழிகள் தானா இவ்வளவும்?" என்று இத்தலையங்கத்தைப் படிக்கும் நண்பர்களிற் சிலராவது கேட்டுக்கொண்டிருப்பது நம் காதில் விழாமல் இல்லை!

அந்த "ஐயுறு நண்பர்"கட்கு அன்புடன் உரைத்திட விழைகிறோம், ஆதாரங்கள் ஏராளமாக உண்டு. இதோ இரண்டொன்று.

"மொழிவாரி மாகாணங்கள் அமைவது என்பது ஒரு பெரிய பிரச்சினைதான். ஆனால் அதைவிட வேறான அதனினும் முக்கியமான பல பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை நாம் நெஞ்சில் நிறுத்திக் கொள்ளவேண்டும். நான் இப்போது சொல்லப்போவது நம் எதிர்கால நல்வாழ்வைப் பற்றியதும் ஆட்சி முறையைப் பற்றியதுமான ஒன்று. இந்த மொழிவாரி மாகாணப் பிரச்சினை நான் இப்போது சொல்லப் போவதைப்போல அப்படி ஒன்றும் இங்கேயே இப்போதே இன்றைக்கே தீர்த்துக்கட்ட வேண்டிய அளவு முக்கியமான பிரச்சினை அல்ல—அதைவிட பல முக்கியமான பிரச்சினைகள் காத்துக்கொண்டிருக்கின்றன."

பண்டித ஜவஹர்லால் நேரு—இந்தியாவின் முதல்வர் இதுபோலப் பேசியிருக்கிறார் ஆய்வுகுழுவின் அறிக்கை வெளிவந்த பிறகு அல்ல, அதற்கு முன்னால்! நெஞ்சில் நிறுத்துங்கள், ஆய்வுகுழுவினர் தம் உள்ளக் கருத்தை வெளியிட்ட தேதி டிசம்பர் 10. ஜவஹர்லால் நேரு மொழிவாரி பிரிவினை இதுபோது தேவையில்லை என்பதை வலியுறுத்திப் பேசியிருக்கும் நாள் நவம்பர் 8. இடையே இருப்பன 32 நாட்கள்! இந்த முப்பத்திரண்டு நாட்களில் மொழிவழி மாகாண ஆய்வு குழுவினர் ஜவஹர் உரையைக் கேட்டு தம் உள்ளக் கருத்தை ஜவஹர் உரைக்கேற்ப திருத்தி அமைத்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்று யார் உறுதிகூற முடியும்? மொழிவழி மாகாணங்கள் அமையவேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி நாடெங்கும் சென்று எல்லோரையும் கண்டு பேசி நாட்டுக்கு ஒரு முடிவான ஆய்வுரை வழங்க ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது சர்க்காரால், அந்தக் கமிட்டியும் பற்பல இடங்கள் சென்று பல்லோர் உரையும் கேட்டு உள்ளக் கருத்தொன்றை உருவாக்கிக்கொள்ள முயன்றுவருகிறது, அறிஞர் பலரும் ஆழ்ந்த சிந்தனைக்கும் நீண்ட அனுபவத்திற்கும் பிறகு பெற்ற தத்தம் முடிந்த முடிபுகளை குழுவினரிடம் கொட்டிக் குவித்தவண்ணம் உள்ளனர், குழுவினர் அம் முடிபுகளை ஒன்றுடன் ஒன்றை ஒப்பிட்டுப் பார்த்து, ஒன்றுடன் ஒன்றை மோதவிட்டுப் பார்த்து, ஒன்றிலிருந்து ஒன்றை கழித்துப் பார்த்து, ஒன்றுடன் ஒன்றை கூட்டிப்பார்த்து ஒன்றை மற்றொன்றால் வகுத்துப் பார்த்து ஏதேதோ செய்தவண்ணம் உள்ளனர், அவர்களுடைய முடிவான அறிக்கை இன்னும் வரவில்லை, இத்தகு நிலையில் அந்தக் குழுவினரை நியமித்த சர்க்காரின் பிரதம மந்திரி—அதுவும் பண்டித நேருவைப்போன்ற ஒரு பழுத்த தேசபக்தர்—அதுவும் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு மாபெருந் தலைவர் மொழிவழி மாகாணம் காலவரையறையின்றி ஒத்திப் போடப்படவேண்டியதுதான் என்ற முறையில் பாராளுமன்றத்தில், பலர் அறிய, பார் அதிர, பத்திரிக்கைகளில் முழுப் பக்கத் தலைப்பு மொழிகள் பளிச் பளிச் என மிளிர, வீரமுழக்கம் எழுப்புவாரானால் ஆய்வுகுழுவின் விசாரணையை, கொஞ்சம் காரமான மொழியிலே கூறுவதானால் ஒரு கேலிக்கூத்து என்றும் சற்று நாகரிகமான 'பாணி'யிலே பேசுவதானால் அர்த்தமற்ற சடங்கு என்றும் சித்தரிப்பதுதவிர வேறு எப்படிச் சித்தரிக்க முடியும்?—நாம் மட்டுமல்ல, வேறு யாருமேதான்! "**ஆய்வு குழுவினரே! மொழிவழி மாகாணம் கூடாது என்று அறிக்கை பிறப்பியுங்கள்! அது தவிர வேறு எம் முறையிலும் உங்கள் அறிக்கை இருத்தல் ஆகாது**" என்று பண்டிதர் ஆய்வுகுழுவினர்க்குக் கட்டளை பிறப்பிக்கிறார் என்றுதானே பொருள் பண்டிதர் பேசியுள்ள இந்தப் பொன்மொழிக்கு? "முதலமைச்சர் நமக்குக் கட்டளை பிறப்பித்துவிட்டார்—அந்தக் கட்டளைக்கு இணங்கிப் போவதுதான் ஒழுங்கு, முறை, நியாயம், கடமையுங்கூட!" என்றல்லவா ஆய்வுகுழுவினர் எண்ணியிருப்பர் இந்த வீர முழக்கத்தைப் பத்திரிகைகளிலே படித்ததும்!

"மொழிவழி மாகாணப் பிரிவினை அவசியம் தான்!"

"அவசியம்தான்......ஆனால்......"

"ஆனால் என்று இழுப்பானேன்! அவசியம் என்று சொல்லவேண்டியதுதானே முறை!"

"முறைதான்...என்றாலும்..."

"என்றாலும் என்ன என்றாலும்! அவசியம் என்று தோன்றினால் அதை வெளிப்படையாக அறிக்கை மூலம் நாட்டுக்குத் தெரிவித்துவிட வேண்டியதுதானே! ஏன் தயக்கம், ஏன் அச்சம், ஏன் இந்த மயக்கமான போக்கு? எதற்காக இப்படி அஞ்ச வேண்டும்?"

"என்ன இருந்தாலும் நேருஜீ மொழிவழி மாகாணங்கள் கூடாது என்று கூறிவிட்டபிறகு நாம் அது அவசியம் தேவை என்று அறிக்கை வெளியிட்டால் நன்றாக இருக்குமா?"

"அதற்காக நம் மனச்சான்றை விலைக்கு விற்பதா?

அது கூடாது. நெஞ்சில் உற்றதை நேர்மையில் காட்டுவதே மறக்குல மாட்சி! உள்ளத்தில் பட்டதை ஒளிக்காது உரைப்போம்! எது வரினும் வரட்டும், உண்மை உலவட்டும்!"

"அப்படியென்றால் நம் நேருஜிக்கு துரோகம் புரிவதா? செ! கூடாது! நம் அறிக்கை மாகாணப் பிரிவினையை வலியுறுத்தி வருமானால் அந்த உத்தமர் உள்ளம் நோகும், நம் குருதேவர் காந்திஜீயின் ஆத்மீக வார்சு அல்லவா அந்த மோதிலால் புத்திரர்!"

"ஆம்! அவர் கிடைத்தற்கரிய அற்புதப் பொக்கிஷம்தான்! மனிதருள் மாணிக்கம் என்று மஹாத்மாவின் மணிமொழிகளால் அர்ச்சிக்கப்பட்ட தியாகத்தின் திருஉருதான். ஆனால் அதற்காக நம் உள்ளக் கருத்தை மாற்றிச் சொல்வதா? நீதி நெறியினின்றும் வழுவுவதா?"

"பின், நேருஜியை மறுத்துப் பேசுவதா?"

"கூடாதுதான், அதற்காக உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று கூறுதல் நேர்மையா?"

"என்னமோ நேருஜியை ஆதரிப்பதுதான் நம் கடமை வேறென்ன சொல்வது!"

"கடமை இருக்கட்டும், நெஞ்சில் பட்டதை மறையாது உரைப்பது நம் உரிமையாயிற்றே, அதைவிட்டுக் கொடுப்பதா!"

"சங்கடமான நிலைமைதான்! என்ன செய்வதென்றே புரியவில்லை!"

"வெறும் சங்கடமல்ல, தர்ம சங்கடம்! ஏன்தான் நேருஜீ இப்படிப் பேசித் தொலைத்தாரோ!"

இதுபோன்றதோர் போராட்டம் பண்டித நேருவின் பேச்சுக்குப் பிறகு ஆய்வு குழுவினர் ஒவ்வொருவர் உள்ளத்திலும் நடந்துதான் இருக்கும்—நிச்சயம்! அதிலும் அந்த ஆய்வு குழுவினரிலே ஒருவர்—பெயர் **பி. சி. பானர்ஜி** என்றெண்ணுகிறோம், அரசியல் ஆக்க மன்றத்தின் உறுப்பினர்கூட! அந்த மன்றத்திலே தான் பண்டிதர் இதுபோலப் பேசினார். பண்டிதர் அங்கே இதுபோல ஆய்வுரை வழங்கிய ஞான்று அந்த உறுப்பினரும் அங்கே இருந்திருக்கக்கூடும். அப்படி இருந்திருந்தால் பண்டிதர் பேச்சினை அவருக்குப் பிறப்பிக்கப்பட்ட நேர்முகத் தாக்கீது என்றல்லவா நாம் கொள்ள வேண்டும்? அப்படிக் கொண்டால் ஆய்வு குழுவினரின் விசாரணை வெறும் நாடகம் என்று மட்டுமல்ல அது மக்களை ஏமாற்றுவதற்காகக் கையாளப்பட்ட நயவஞ்சகம் என்றும் அல்லவா ஏற்பட்டுவிடும்?

முதல் பிரதமர் பண்டிதராவது கொஞ்சம் மெருகு கொடுத்துப் பேசி இருக்கிறார் ஆனால் துணைப் பிரதமர் சர்தார் படேலோ வெளிப்படையாகவே உண்மையைக் கக்கி விட்டிருக்கிறார்.

"மொழியின் காரணமாக பிரிவினை வேண்டும் என்று பேசுவது நம்முடைய பழைய வரலாற்றிலிருந்து நாம் கற்றுக்கொண்ட கொடுமையான உண்மைகளை நாம் வேண்டுமென்றே மறந்து விடுகிறோம் என்பதற்குச் சரியான ஆதாரம். நாம் பெற்ற சுதந்தரத்தை நிச்சயமாக இழந்து விடுவதற்குரிய சரியான வழியே இந்த மொழி வழி மாகாணக்கோரிக்கை. இந்திய மாகாணங்களை மொழி என்ற அடிப்படையில் மாற்றி அமைக்கவேண்டும் என்ற கோட்பாடு தேசிய ஒற்றுமைக்கும் கட்டுப்பாட்டிற்கும் நேர் விரோதமானது என்றே நான் கருதுகிறேன். ஆகவே அந்தக் கோரிக்கையை நான் மிகவும் வெறுக்கிறேன். இத்தகைய மோசமான பிரிவினை உணர்ச்சியை தலைதூக்கும்படி விடுவது மிக ஆபத்தான விளையாட்டு என்பதில் ஐயமில்லை. இதுபோல இந்தியாவின் ஒற்றுமை கெடும் விதத்தில் பேசுவோரையும் செயலாற்றுவோரையும் நான் அழுத்தந் திருத்தமாக எச்சரிக்க விரும்புகிறேன்!"

படேல் இதுபோல அனல் கக்கும் வார்த்தைகளை தன் உள்ளம் எனும் பயங்கரமான இருண்ட குகையிலிருந்து எடுத்து வெளியே எறிந்த நாள் நன்றாகக் குறித்துவைத்துக் கொள்ளுங்கள்—நவம்பர் 4. அதாவது ஆய்வு குழுவினரின் அறிக்கை வெளிவருவதற்கு 36 நாட்களுக்கு முந்தி! இவ்வளவு பயங்கரமான எச்சரிக்கைக்குப் பிறகு எந்த ஆய்வு குழுவினர்தான் இந்த இரும்பு மனிதரின் எண்ணத்திற்கு மாறாகப்பேச முடியும்?

பண்டித நேரு—டில்லியில் **நவம்பர் 8-ல்** மொழிவழி மாகாணம் கூடாது என முழங்குகிறார்!

சர்தார் படேல் நாக்பூரில் **நவம்பர் 4-ல்** மொழிவழி மாகாணம் வேண்டும் என்பவர்களைச் சிறையில் அடைப்பேன் என்ற தோரணையில் நெருப்புக் குழம்பைக் கக்குகிறார்.

நேருவின் விரிவுரைக்கு 32 நாட்களுக்குப் பிறகும், படேல் அதிர் வேட்டுக்கு 36 நாட்களுக்கு அப்புறமும் —**ஐயோ பாவம்**—மொழிவழி மாகாணப் பிரிவினைக் குழுவினரின் சரணாகதி அறிக்கை வெளிவருகிறது, முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னேபோற் போற்றுவோம் என்ற இலக்கணத்திற்கு அரியதோர் இலக்கியமாக! பரிதாபம்! பரிதாபம்!

காட்டிலே உலவும் கிளிகூட வீட்டுக் கூண்டிலே வந்து அடைபடும்போது சொந்தக்காரன் சொல்லிக் கொடுப்பதை அப்படியே திருப்பிச் சொன்னாலும் மனிதன் குரலிலே இல்லாத கொஞ்சம் இனிமையையேனும் கூட்டித் தருகிறது. சொல்லிலே கொஞ்சம் குழைவு—நெளிவு—இன்பம்—அழகு—ததும்புகிறது! ஆனால் இந்த தார்—லால்—லால்—பானர்ஜி கூட்டுக் குழுவினரின் அறிக்கையோ தம் எஜமானர்களின் கிராமபோன் ப்ளேட்டாக இருக்கிறது! கொஞ்சம் கூட மாறுதல் இல்லை! அதே பேச்சு! அதே குரல்! அதே ஒலிமுறை! அதே அசை! "இந்த ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ் அறிக்கை வெளிவருவதற்குத்தானா இவ்வளவு தடபுடல், ஆரவாரம், விசாரணை கமிஷன், எல்லாம்!" என்று சொல்லி ஆச்சரியப்படுகிறார், "**ஆந்திரா ஹெரால்டு**" என்ற ஆங்கில இதழாசிரியர், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்! அவருடைய ஆச்சரியம், அடடா எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! சர்க்காரின் கருத்தை—சர்க்காரின் கருத்தை என்று சொல்வதுகூட தவறு எல்லா அமைச்சர்களும் இதே கருத்தினர்தானா என்பது தெரியவில்லை—படேல்ஜி நேருஜீ கூட்டுக் கருத்தை வெளியிடுவதுதான் தேவை என்றால் அதற்கு ஒரு கமிஷன் நாடு முழுவதும் சுற்றி நாலு திக்கிலும் சென்று கல்லோர் உரையெல்லாம் கேட்டு அறியவேண்டிய அவசியமே கிடையாதே! சர்க்கார் கெஜட்டில் ஒரே ஒரு ஒத்தை வரியில் ஒரு சிறு அறிவிப்பு இருந்தால் போதுமே!

அடே அப்பா! நாம் எவ்வளவு பிரமாதமாக எண்ணினோம் இந்தக் கமிஷனைப்பற்றி! அதெல்லாம் எவ்வளவு தவறு! சர்க்கார் கெஜட்டிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட ஒரு ஏடு இந்த ஆய்வுகுழு! ஏடு என்றால் அசல் ஏடு என்று எண்ணிக்கொள்ளாதீர்கள், நகல்! அவ்வளவுதான்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்திலே குழப்பம் ஏற்படும். குழப்பத்துக்கு ஆதி காரண கர்த்தா இரண்டு கதர் சட்டைக்காரர்களாக இருப்பார்கள். குழப்பம் வளர்ந்தபோது ஒரு கருஞ்சட்டைத் தோழர் கதர் சட்டையினருடன் கைகலக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். வழக்கு பதிவாகும். ஆனால் குற்றவாளி ஜாபிதாவில் கருஞ்சட்டைத் தோழர் பெயர் மட்டும்தான் இருக்கும். கதர் சட்டைக்காரர்கள் பெயர் மாயமாக மறைந்துவிடும். கருஞ்சட்டை நண்பர் கூண்டிலே ஏறுவார் ஆனால் குழப்பத்திற்கு விதை தூவிய கதர் சட்டைக்காரர்கள் அடுத்த திராவிடர் கழகக் கூட்டத்தில் எப்படி குழப்பம் விளைப்பது என்பதுபற்றி வருங்காலத் திட்டம் வகுத்துக் கொண்டிருப்பார்கள் தம் மனதிற்குள்ளே, ஊரிலே பெரிய மனிதர்களாக உலவிக்கொண்டு! நிர்வாகம், நீதியிலே குறுக்கிட்டு நியாயத்தின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சம்பவம் இதுபோல எண்ணற்றன உண்டு.

அண்ணாமலை நகரிலே சென்ற ஆண்டு காங்கிரஸ் மாணவர்கள் திராவிடர் கழக மாணவர்களை நையப் புடைத்துவிட்டனர் போலீசார் இரு சாரிலும் பல மாணவர்களைக் கைது செய்தனர். ஆனால் நிர்வாகம் நீதியில் தலையிட்டது— காங்கிரஸ் மாணவர்களுக்கு விதிவிலக்கு கிடைத்தது — அவர்கள் விடுதலையாகி வெற்றி வீரர்களாக வெளியே உலவுகின்றனர்— ஆனால் அடிபட்ட திராவிடர் கழகக் காளைகள் மீதோ பிறரை அடித்ததாக வழக்கு மிக ஜரூராக நடந்து கொண்டிருக்கிறது.

கரூரிலே மூன்றாண்டுகளுக்கு முன்னால் மூண்டெழுந்த உழவர்களின் போராட்டத்தின்போது மிராசுதாரர்களின் கிடங்குகள் வீடுகள் முதலியன சில தீக்கிரையாயின—பயிர் பச்சைகள் நாசமாக்கப்பட்டன—பெருத்த அமளி கரூர்ப் பக்கத்தில் — கம்யூனிஸ்டுகள் காங்கிரஸ்காரர்கள் கருஞ்சட்டையினர் முத்திறத்தாரும் கைது செய்யப்பட்டனர். அரெஸ்ட் வாரண்ட் பிறப்பிக்கப்பட்ட திராவிடர் கழக நண்பர்களிலே இருவர் கரூர் கலவரத்தின்போது இந்த உலகத்திலேயே இல்லாதவர்கள்! அதாவது கலவரம் நிகழ்ந்ததற்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே இயற்கை எய்தியவர்கள், அவர்கள் மீதுகூட வாரண்ட் தொடுக்கப்பட்டது போலீசாரால்! நீதி, நிர்வாகத்திற்கு அவ்வளவு தூரம் நடுங்க வேண்டியிருக்கிறது, இன்றைய ஆட்சி முறையில்! காங்கிரஸ் நிர்வாகம் பிறகு கரூர் வழக்கில் குற்றவாளிகளாகப் பதிவு செய்யப்பட்ட காங்கிரஸ் தோழர்கள் யாவரையும் விடுதலை செய்துவிட்டது — கம்யூனிஸ்ட், கருஞ்சட்டை நண்பர்கள் மட்டும் இன்னமும் சிறைக் கம்பிகளை எண்ணிக் கொண்டு இருக்கின்றனர். கட்சி என்ற குறுகிய போக்குடன் சர்க்கார் கதர் சட்டைக்காரர்களை மட்டும் விடுவித்துக் கொண்டது—பிற கட்சியினரைச் சிறையிலே கிடந்து சிதையும்படி விட்டு விட்டது.

நீதி, நிர்வாகம், என்னும் இந்த இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பே இப்படி, நீதி, அடிக்கடி நிலைகுலைந்து போவதற்கான மூல காரணம். நீதி பாரபட்சமற்றதாகவும் "இவர் நமக்கு இனியர் இவர் இன்னார்" என்ற பாகுபாடின்றி செலுத்தப் படுவதாகவும் இருக்கவேண்டுமானால், நீதி, சர்க்கார் நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்டதாக இருக்கக்கூடாது. நீதி மன்றங்கள் சர்க்கார நிர்வாகத்தின் நேரடித் தொடர்பில் இருக்கும் வரை சர்க்காரின் குற்றங்குறைகளை எடுத்துச் சொல்பவர்களுக்கு எப்படி நீதி கிடைக்கமுடியும்? நாம், திராவிடர் கழகத்தார், இந்த மாகாணத்து காங்கிரஸ் சர்க்கார் ஜனநாயக உரிமைகளை மக்களிடமிருந்து தட்டிப் பறித்துக்கொண்டு சர்வாதிகார ஆட்சி செலுத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டுகிறோம். உடனே சர்க்கார் நம்மைக் கைது செய்கிறது. உண்மையை எடுத்துச் சொன்னதற்காக ஆளாள்வோர் எம் உடல்மீது கூர்வாளைப் பாய்ச்சுகிறார்கள் இது நீதியா என்று நாம் அறமன்றத்திலே சர்க்கார்மீது வழக்குத் தொடுக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது என்ன நடக்கும்? நாம் சொல்வது நியாயம்தான்— சர்க்கார் குடியாட்சி உரிமைகளைப் பறிப்பது மெய்தான்—மக்கள் அடக்குமுறை கொட்டிமுனைகளிற் சிக்கிக்கொண்டு உரிமையைக் காப்பதற்கான உயரிய போராட்டத்தில் பச்சைரத்தம் பரிமாறுவது உண்மையேதான்—உண்மைக் குற்றவாளி சர்க்கார்தான் என்று நீதிபதி ஐயம் திரிபுஅற உணர்ந்தாலுங்கூட, அவர் சர்க்காரால் நியமிக்கப்பட்டு சர்க்காரால் விலக்கப்படக்கூடிய நிலையிலே இருப்பவரானால், அவர் எப்படி சர்க்காரே குற்றவாளி என்று கூறமுடியும்? ஆனால் நீதிமன்றம் சர்க்காருக்குக் கட்டுப்படாத, சர்க்காரால் நேரடியாக நியமிக்கப்படாத, சர்க்கார் சொல்வழி நின்றே தீரவேண்டிய கட்டாயத்தில் இல்லாத சுதந்தரமும் சுயேச்சையும் பெற்றதாக இருக்குமானால் நிச்சயம் அது சர்க்காரின் குற்றங்களை சமயம் நேர்ந்தபோதெல்லாம் இடித்துக் காட்டத் தயங்காது. அமெரிக்காவிலே "சுப்ரீம் கோர்ட்" என்றோர் நீதிமன்றம் இருக்கிறது — அமெரிக்காவிற்கே தலைமை நீதி மன்றம் அது. அந்த மன்றம் அமெரிக்க சர்க்காருக்கு நேரடியாக கட்டுப்பட்டதல்ல. ஆகவே அது பல சமயங்களில் அமெரிக்க சர்க்காரின் நெறிதவறிய நடத்தைகளை அச்சம் தயைதாட்சண்ணியமின்றி எடுத்துக் காட்டுகிறது. "நாம் ஆளவந்தார்களாக இருக்கிறோம், நாம் எது செய்தால் என்ன, நம்மை எவர் கேட்கமுடியும்—அடுத்த தேர்தல் நாள் நெருங்கும் வரை" என்ற உன்மத்த எண்ணங் கொண்டு உயர் நெறியிலிருந்து பிறழ முடியாது அங்குள்ள சர்க்கார். காரணம் சுப்ரீம் கோர்ட் சர்க்காருக்கு அஞ்சாது, சர்க்காரின் குறைபாடுகளை இடித்துக் காட்டமுடியும். ஆனால் இங்கோ......? சர்க்காருக்கு அஞ்சிக் கொண்டோ அல்லது சர்க்கார் சொற்படி நடக்கவேண்டும் என்ற சூழ்நிலைக் கட்டாயத்தாலோ அல்லது நம்ம சர்க்காராயிற்றே—குற்றம் கூறலாமா என்ற பாசத்தால் பிணிக்கப் பட்டோ அல்லது ஆளவந்தார்களின் ஆணவத்தை இடித்துக் காட்டினால் அவர்கள் பிடியிலே கிடக்கும் நமது எதிர்காலம் இருண்டுபோகுமே என்ற குளிர்ஜுரம் கொண்டோ நீதிதேவர்கள் இந்நாட்டில் அடிக்கடி அறநெறியிலிருந்து மயங்கி பிறழ்வது சர்வசாதாரணம் என்று சொல்ல வெட்கப்படுகிறோம், வெட்கத்தைவிட அதிகமாக துக்கம் மேலிடுகிறது நமக்கு நமதருமை நாட்டிலேயா இந்த அறநெறி

(9-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை:

# மனப் புயல்

இராதாமணாளன்

இருபத்திஐந்தாவது பகுதி
மனப்புயல்

பயங்கரமான அமைதி நிலவிய அன்றிரவின், பிற்பகுதியில் ஆரம்பித்த தூறல் பிறகு பெருமழையாக மாறி, விடாது பெய்துகொண்டே இருந்தது. ஒருவாரம் சென்றது! பொழுது புலர்ந்தது! சோவென மழை விடாது கொட்டிக்கொண்டே இருந்தது.

வேணி தெருக்கதவைத் திறந்து கொண்டு, வெளியில் வந்து எட் டிப்பார்த்தாள். கிளையொடிந்து, இலை உதிர்ந்து, வேர் பெயர்ந்து உருமாறிக்கிடந்த மரஞ்செடிகளைக் ண்டதும் அவள் உள்ளம் திடுக் ிட்டது. அந்த கோரமான காட் சிக்கும் வேணியின் வாழ்விற்கும் ன்ன தொடர்பு? தொடர்பு இல்லை என்றால் அவள் உள்ளம் நடுங்கியதே, அது ஏன்?

வேணி, கதவை மூடிவிட்டு மார் இருந்த அறையினுள் சென் ள். குமாரின் முகத்தில் மகிழ்ச்சி இல்லை, அவளைக் கண்டதும் வழக் ப்படி அவன் செய்யும் வரவேற் ல்லை! தீட்டிக் கொண்டிருந்த வியத்திலேயே தன் கருத்தையும் ண்ணையும் அவன் பூர்ணமாக சலுத்திவிட்டான். ஆகவே ணி அருகே வந்து நின்றதை ம் அவனால் அறிந்துகொள்ள டியவில்லை. சித்தத்தில் வருத்தம் றைந்திருந்தது எனினும் சிந்தனை லைகள் அவன் முகத்தில் பரவி ருந்தன! ஓவியக் கோலின் லியைக் கொண்டு கற்பனைக்கு யிரளித்துக் கொண்டிருந்தான். வர்ண ஓவியத்தில் வேணியின் ண்டு விழிகள் மொய்க்கத் தாடங்கின. உயிரோவியத்தைக் ணக் கான உள்ளத்தில் ஏதோ வித பயங்கரமான உருவந் தோன்றி, அவனைக் கிடுகிடுக்கச் செய்தது!

அலைகடலுக்கருகே ஆகாயத்தை முட்ட வளர்ந்திருந்த மரங்கள் நிறைந்த காடு! மரங்களும் செடிகளும் சுழன்று சுழன்று வீசும் சூறாவளியினால் நிலைபெயர்ந்து வாழ்விழந்து காணப்படுகின்றன! செத்துக் கிடக்கிறது சிங்கம்! உயிர் பிரியும் சறுவாயில் தரையில் வீழ்ந்து புரளுகிறது சிறுத்தை! ஒடிந்து சாய்ந்த மரக்கிளைக் கடியில் கூழாகி விட்ட புள்ளிமான்! முயலை வாயில் கவ்விக் கொண்டே பிணமான நரி! சிறகொடிந்த பறவைகள்! காலொடிந்து நகரமுடியாமலிருந்த மயில்கள்! வீசும் புயலால் கடலில் ஒரே கொந்தளிப்பு! அலையோடு அலை மோதி சிதறி வீழ்கின்றன! படகொன்று மூழ்கிக் கொண்டே இருக்கிறது! ஒரு இளம் பெண் உயிருச்காக அலைகளோடு போராடிக் கொண்டிருக்கிறாள்! கடற்கரை எங்கும் சூறாவளியின் கோரத்தாண்டவம்! மணல்மேடு! அதன் மீது ஒரு வாலிபன்! அவன் தலைமயிர் காற்றில் பறந்து கொண்டிருக்கிறது. முகத்தில் எண்ணங்களின் கிரல்கள் ஏராளம். கன்னத்தில் கைவைத்துக்கொண்டு, ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருக்கிறான்!

—இதுதான் குமார் தீட்டிக் கொண்டிருந்த உயிர் சிலிர்க்கும் ஓவியம்! அந்தப் பயங்கரமான சித்திரத்தைச் சிற்றிடையாள் மிரள மிரளப் பார்த்துக்கொண்டிருந்தாள். "அத்தான்" என்று மெதுவாக அழைத்தாள். அவனுக்கு அது கேட்கவே இல்லை. அவளுக்கே ஐயமேற்பட்டது, தன் வாயிலிருந்து ஒலி வெளியில் சென்றதா இல்லையா வென்று! "அத்தான்" என்றாள் திரும்பவும், சிறிது உரத்த குரலில். கற்பனை உலகத்தின் ஏதோ ஒரு கோடியில் சுற்றியலைந்து கொண்டிருந்த அவன் காதிலா அவ்வார்த்தை புகப் போகிறது? மௌனமாகவிருந்தான். சிறிது நேரத்திற்குப் பிறகு அவன் பெருத்த தோள்களைப் பிடித்து அசைத்து, "அத்தான்" என்றாள் பயம் கலந்த குரலில். கனவுலகத்திலிருந்து விடுபட்டு திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

"வேணி, என்னையா அழைத்தாய்?" கலங்கிய குரலில் கேட்டான். அவன் முகமும் கண்களும் ஏதோ ஒரு விதமாக அவளுக்குத் தோன்றின.

"அத்தான், எனக்குப் பயமாகவிருக்கிறது?"

"ஏன் வேணி?"

"இதுவென்ன சித்திரம்? இதிலேன் இவ்வளவு கோரம்?"

"உனக்குப் புரியாது வேணி!"

"புரியும்படி விவரித்துக் கூறுங்களேன்!"

"முற்றுப்பெறாத சித்திரம் இது! முடித்துவிட்டு விளக்குகிறேன்!"

"முதலில் ஒன்றே ஒன்றை மட்டும் கூறுங்கள், அத்தான், அது போதும் எனக்கு. அழகிய ஓவியங்களைத் தீட்டிக்கொண்டிருந்த தங்களை, இந்த அகோரமான படைப்பைச் சிருஷ்டிக்கத் தூண்டியது எது?"

"மனப்புயல்!"

"என்ன?......மனப்புயல்!..."

"ஆம், மனப்புயல்! மனப்புயல்!"

"தங்களுக்குமா?"

"எனக்கு மட்டுமென்ன உனக்கும் கூடத்தான்! ஆண்டியானாலும் அரசிளங்குமரனானாலும், வேலைக்காரியானாலும் வேந்தனின் திருமகளானாலும் — அனைவருக்கும் பொதுச்சொத்து, வேணி, மனப்புயல்!

"இதனை முடிவைத்து விடுகிறீர்களா, அத்தான்?"

"மூடி வைப்பதேன், கிழித்தே எரித்துவிடப் போகிறேன்......இப்பொழுதல்ல, தீட்டிமுடித்து, என் மனதில் வீசும் புயல் ஓயும் மட்டும் இதனைப் பார்த்து ரசித்து, பிறகு .........."

வேணி பேசாதிருந்தாள். குமார் திரும்பவும் தன் வேலையில் ஈடுபட்டான். பெண் அறையைவிட்டு வெளியே வந்தாள். திரும்பவும் தெருக்கதவைத் திறந்து வெளிக்காட்சியில் தன் நாட்டத்தைப்

(8-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

18—12—48 சனிக்கிழமை

# முடிந்துபோன நாடகம்

"மதிப்பிற்குரிய மந்திரிகள் மனம் மகிழும்வண்ணம் எவ்வளவு அதிக தண்டனை தரமுடியுமோ அவ்வளவையும், அவர்களுடைய பரிவாரத்தாரும் உணர்ச்சி திருப்தி அடையும்வண்ணம் எவ்வளவு தாழ்ந்த வகுப்பு கொடுக்க முடியுமோ அதையும் கொடுத்து, இந்த வழக்கு விசாரணை நாடகத்தை உடனே முடித்துவிடும்படி வேண்டிக்கொள்கிறேன்."

நிதானமாக ஆனால் அழுத்தந்திருத்தமாக, வார்த்தை வார்த்தையாக ஆனால் வாலிபர் உள்ளத்தில் எல்லாம் விறுவிறுப்பை உண்டுபண்ணும் விதத்தில், பெரியார், இந்த வாசகத்தை வீசினார்—நீதி மன்றம் நீண்ட அமைதியின் இருப்பிடமாயிற்று. நீதிபதிக்கு முன்னால், குற்றவாளிக் கூண்டில், நாற்காலியில் அமர்ந்த வண்ணம், பெரியார், சர்வ சாதாரணமாகத்தான் இதைக் கூறினார் ஆனால் ஏனோ கோர்ட்டில் கூடியிருந்த மக்கள் உள்ளத்தில் எல்லாம் வியப்பும் களிப்பும் ஒருசேரக் கூத்தாடலாயின. அனைவர் கண்களும் அவர் முகமலர் மீதே மொய்த்திருக்க அந்த ஆணழகர் மேலும் பேசினார்.

"இந்த கோர்ட் மந்திரிமார்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டது. மந்திரிமார்களோ என் முயற்சியை ஒடுக்க வேண்டுமென்று முடிவுகட்டிவிட்டார்கள். இப்படியிருக்கையில் மந்திரிமார்களின் விருப்பத்திற்கு மாறாக இந்த மன்றம் எனக்கு நியாயம் வழங்கும் என்று எப்படி நான் எதிர்பார்க்கமுடியும்?"

விடை சொல்ல முடியாத இந்தக் கேள்வியை எடுத்து வீசியதோடும் நின்றாரா அந்தப் பொல்லாத கிழவர்! இல்லை, மேலும் பேசினார்.

"தாங்களோ பார்ப்பன வகுப்பைச் சேர்ந்தவர்கள். நாடாளும் முதலமைச்சரும் அதே வகுப்பைச் சேர்ந்தவர். என்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமோ பார்ப்பனத் துவேஷமாகப் பேசியது என்பது. இந் நிலையில் நான் எப்படி நியாயம் பிறக்கும் என்று நம்பமுடியும்?"

வழக்கு விசாரணை வெறும் நாடகம் என்பதை இவ்வளவு தெளிவாக விளக்கிவிட்டு, தன் செயல் குற்றமற்றது என்பதை நிரூபித்துக் காட்டினாலும் தன்னைத் தண்டிக்காமல் விடமுடியாது இந்தக் கோர்ட்டார் என்பதையும் எடுத்துச் சொல்லிவிட்டு தன்னைத் தண்டிக்கும் நிலை பெற்றுள்ள நீதிபதி ஒரு பார்ப்பனர்—தன்னைத் தண்டிக்கும்படி அவருக்குக் கட்டளை பிறப்பித்துள்ள முதலமைச்சரும் ஒரு பார்ப்பனர்—இத்தகு சூழ்நிலையில் அறம் எங்ஙனம் ஆட்சி செலுத்தும் என்று எவரும் ஒப்பும் முறையில் சரியானதோர் கேள்விக் குறியை எழுப்பிவிட்டு, பெரியார் இறுதியில் கூறினார்:

"இது அடக்குமுறைக் காலம். அடக்குமுறைக் காலத்தில் கோர்ட்டில் நீதி கிடைக்கும் என எதிர்பார்ப்பது பைத்தியக்காரத்தனம்! ஆகையினால்தான் கூறுகிறேன் இந்த வழக்கு விசாரணை நாடகத்தை விரைவில் முடித்துவிடுங்கள் என்று!"

நீதிபதியும் பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க நாடகத்தை உடனே முடித்துவிட்டார்—மூன்றாண்டு கடுங்காவல் உமக்கு என்ற கடைசி "சீனை" நடத்திவிட்டு!

இது 10 ஆண்டுகளுக்கு முன்பு! ஆச்சாரியார், சென்னை முதலமைச்சர் அப்போது! கட்டாய இந்தி நாட்டிலே பவனி வந்தது—செந்தமிழுக்கு மூலையிலே ஒதுக்கிடம் தரப்பட்டது ஆச்சாரியாரால்—தமிழகம் இக்கொடுமை கண்டு தாங்காது குமுறியெழுந்தது—இப்போதுபோலவே அப்போதும் மொழிப்போராட்டம் மூண்டது—பெரியார் போர்க்களத் தலைவராயினார்—சுழலும் சூறாவளியென, போர், தமிழகம் எங்கணும் சுழன்று சுழன்று வீசிற்று—தமிழ்க்கடல் கொந்தளித்தது—பெரியார் ஆளவந்தார்களால் சிறைபிடிக்கப்பட்டார்—வழக்கு நடந்தது நீதிமன்றத்தில்—வழக்கின் முடிவு அவருக்கு மூன்றாண்டு கடுங் காவல்! இந்த வழக்கு நடந்துகொண்டிருந்தபோதுதான் பெரியார், இந்த வழக்கு விசாரணை வெறும் நாடகம்—இதில் நான் கலந்து கொள்ள முடியாது என்று தெரிவித்துவிட்டார்.

இந்திப் படையெடுப்பினின்று தமிழைப் பாதுகாப்பது குற்றம் என்று ஆளவந்தார்கள் தெரிவித்துவிட்டனர். அதுமட்டுமல்ல அந்தக் "குற்றத்"தைச் செய்பவர்களைத் தண்டிப்பதே தமது கடமை என்றும் அறிவித்து விட்டனர். இந் நிலையில் வழக்கு என்றும், விசாரணை என்றும், சாட்சி என்றும், நியாயம் என்றும், நீதி என்றும், நீதி வழங்குவது என்றும் பேசுவது அர்த்தமற்ற செய்கைகள்தானே! சர்க்கார் பெரியாரைக் கைது செய்தது—நீதிபதி அவரைத் தண்டிக்க வேண்டும்—அதுதான் சர்க்காரின் "விருப்பம்"—விருப்பம் அல்ல! மறைமுகமான கட்டளை!—நீதிபதி அந்தக் கட்டளையினின்றும் தப்பமுடியாது—சர்க்காரின் எண்ணத்திற்கு மாறான தீர்ப்பை, "தமிழைப் பாதுகாத்ததால் இவர் பாராட்டப்படவேண்டியவரே தவிர சிறைச்சாலைக்கு அனுப்பப்பட வேண்டியவர் அல்லர்" என்னும் அரிய தீர்ப்பை அவரால் வழங்க முடியாது. அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பெரியாரை அவர் தண்டித்தே தீரவேண்டும். ஆகவேதான் பெரியார் அழகாகவும் ஆழ்ந்த கருத்து அமைந்த விதத்திலேயும் கூறினார் வழக்கு விசாரணை வெறும் நாடகம் என்று!

ஆளவந்தார்கள் தம் செயலின் உள்ளும் புறமும் படிந்துகிடக்கும் ஆணவத்தைத அநீதியை அக்கிரமத்தை எடுத்து விளக்கிய அந்த அஞ்சாத நெஞ்ச

...ரைச் சிறைப்படுத்த விரும்பினர்—அந்த விருப்பத்திற்கு ஒரு முகமூடி 'சட்டம்'!—அந்தத் தங்க முகமூடிக்குப் பூசப்பட்ட வெள்ளி முலாம், 'விசாரணை'! அவ்வளவுதான்! அந்த விசாரணை அல்ல முக்கியம், அந்த விசாரணையைத் தாங்கி நிற்கும் சட்டமும் முக்கியமல்ல, அந்த சட்டம் எனும் முகமூடிக்குள்ளே மறைந்து உறையும் மா மண்டை படைத்த ஆளவந்தார்கள், அவர்களின் பாசிபடிந்த சிந்தனை, அந்தச் சிந்தனையின் விளைவாக நாட்டிலே மூட்டிவிடப்பட்ட வேதனைத் தீ, அந்தத் தீயிலே வெந்து கருகட்டும் என்று வீசிடப்பட்ட செந்தமிழ்—இவைதாம் முக்கியம்.

"என்ன விலை கொடுத்தேனும் என் தமிழைக் காப்பாற்றியே தீருவேன்"—இது பெரியாரின் உறுதி.

"அதுதான் முடியாது என் அருமைத் தோழரே! இந்தியை நுழைத்தே தீருவேன்! செந்தமிழை இந்திச் சிறு வண்டு கொத்திக் குலைக்கவே வழி தேடுவேன்!"—இது, ஆச்சாரியாரின் சாகசம்!

"அப்படியானால் நண்பரே அறப்போர் நடைபெறும் நாட்டில்! தயார் செய்துகொள்ளும் உம்மை நீர்! களம் புகு காதை விரைவில் தொடங்கப்பட்டுவிடும்."—பெரியார் பேசிய பைந்தமிழ்!

"ஆஹா ரெடி! ஆள்வது நானா அல்லது எங்கோ ஈரோட்டிலே இருக்கும் நீங்களா என்பதுதான் இன்றைய பிரச்சினை"—ஆச்சாரியார் காட்டிய ஆரவாரம்!

"பிரச்சினை அதுவல்ல தோழரே! ஆட்சிப் பீடத்தைப் பற்றியோ அதிலே பொருத்தப்பட்டிருக்கும் வெல்வெட் மெத்தையைப்பற்றியோ எனக்கில்லை கவலை! இந்திக் கொசு செந்தமிழ்ச் செல்வியின் பொன்னுடலைக் கொட்ட வருகிறது. நான் கொசு வலை விரிக்கிறேன் பைந்தமிழ்ப் பூங்கொடி உறங்கிட. நீரோ அதைத் தடுக்கிறீர், வலையை அறுக்கிறீர், கொசுக்கள் பெருகிட சாக்கடை பற்பல அமைக்கிறீர், இது கூடாது"—பெரியாரின் கருத்து விளக்கம்.

"கூடாது என்று கூறினீர்! வாரும் சிறைக் கோட்டத்திற்கு! சிறைச்சாலை உம்மை அழைக்கிறது!"—ஆச்சாரியாரின் பேச்சுச் சுருக்கம்!

இந்த உரையாடலின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் தான் நீதிமன்றத்து விசாரணை! ஆச்சாரியாரின் ஆட்சிக்கு உட்பட்ட நீதிமன்றம் இந் நிலையில் பெரியாரைத் தண்டிக்காது எப்படி இருக்கமுடியும்? எனவேதான் பெரியார் வழக்கு விசாரணை ஓர் ஏமாற்று நாடகம் என்று குறிப்பிட்டார். நாடு, அந்த ஒரே வாசகத்தால், நாடாள வந்தவர்களின் நற்பண்பு எவ்வளவு "உயர்ந்தது" என்பதை நன்கறிந்து கொண்டது, அன்று! நாடகம் நடத்துகிறார்கள் நாடாள வந்தவர்கள், இவர்களை ஆட்சிப் பீடத்தில் இனியும் விட்டு வைக்கக் கூடாது என்ற திட்டமான முடிவுக்கு உடனே வந்துவிட்டது தமிழகம்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாடகம் தமிழகத்தில் மட்டும் நடித்துக் காட்டப்பட்டது. இப்போது வேறொரு நாடகம் இந்தப் பரந்த துணைக்கண்டம் முழுவதும் நடித்துக் காட்டப்பட்டிருக்கிறது:

அன்று ஆச்சாரியார் டைரக்டர்! இன்று பண்டித நேரு டைரக்டர்!

அந்த நாடகத்திற்கு நடிகர்கள், போலீஸ் இன்ஸ்பெக்டர் சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கான்ஸ்டபில், ஒரு மாஜிட்ரேட் ஆகியோர்!

இந்த நாடகத்தில் நடிக்க முன்வந்தவர்கள் அவ்வளவு சாமான்யமானவர்கள் அல்ல! கொஞ்சம் பெரியவர்கள்! ஒருவர் அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் "ஜட்ஜ்" ஆக இருந்தவர்! மற்றொருவர் ஐக்கிய மாகாண கவர்னரின் ஆலோசனையாளராக இருந்தவர்! வேறொருவர் பீகாரிலிருந்து அரசியல் ஆக்க மன்றத்திற்கு உறுப்பினராகச் சென்றிருப்பவர்! நாடக சபாவின் காரியதரிசி ஒரு அக்கவுன்டன்ட ஜெனரல்! நாடகத்தில் ராஜபார்ட் வேஷம் அலகாபாத் மாஜி ஜட்ஜ் துரைக்குத்தான்!

அன்று நடிக்கப்பட்ட நாடகத்தின் பெயர் பெரியார் வழக்கு விசாரணை!

இன்று நடிக்கப்பட்டு தற்போது முடிந்துள்ள நாடகத்தின் பெயர் மொழிவாரி மாகாணப் பிரிவினைக் கமிஷன் விசாரணை!

அந்த நாடகம் அதிக நாள் ஓடவில்லை, இரண்டே நாளில் முடிந்துவிட்டது.

ஆனால் இந்த நாடகம் அவ்வளவு விரைவில் முடியவில்லை நான்கு மாதங்கள் தொடர்ந்து நடிக்கப்பட்டிருக்கிறது!

பெரியார் விசாரணை நாடகம் சென்னைவாசிகளுக்கு மட்டும் கிடைத்த "ஸ்பெஷல் டிராமா"! ஆனால் இது—மொழிவழி மாகாண கமிஷன் விசாரணை நாடகம்

(10-ம் பக்கம் பார்க்க)


**தமிழன் தொடுத்த போர்**

அல்லது

**இந்தி எதிர்ப்பியக்க வரலாறு**

★

"போர்வாள்" ஆசிரியர்

மா. இளஞ்செழியன் B. A. (Hons)

தீட்டியது.

★

1937-40ம் ஆண்டுகளில் தமிழ்நாட்டையே அதிர்ந்தெழச் செய்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிகழ்ந்த வகையை உயிரோட்டமுள்ள நடையில் எடுத்துக் கூறும் உணர்ச்சிச் சித்திரம் இந்நூல். "இப்புத்தகம் ஒவ்வொரு தமிழ் இளைஞருடைய கையிலும் இருக்கவேண்டும் என்பது என் ஆசை" என்கிறார் பெரியார். நாவலர் அண்ணாவின் நீண்ட முன்னுரையுடன் கூடியது.

240 பக்கம் விலை 1-12-0

தபாலில் 1-14-0

**பகுத்தறிவுப் பாசறை,**

147, பவழக்காரத் தெரு, சென்னை.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பாய்ச்சினாள்! மழை பெய்து கொண்டே இருந்தது. பழத்தூர் பாழடைந்து விட்டதுபோல் அவளுக்குத் தோன்றியது.

மழையில் நனைந்துகொண்டு தன் வீடு நோக்கி காளிமுத்து வருவதைக் கண்டதும் வெலவெலத்துப் போனாள். மழையில் நனைந்து கொண்டுவரவேண்டிய அவ்வளவு அவசரமான வேலை இப்பொழுது என்ன வந்துவிட்டதென்றெண்ணினாள். அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. காளிமுத்து அருகில் வந்தானோ இல்லையோ, அவசர அவசரமாக "காளிமுத்து, என்ன செய்தி?" என்றுகேட்டாள். அப்படி வினவி முடித்ததும் அவள் உள்ளத்திலிருந்த பாரமிறக்கியது போல அவளுக்குத் தோன்றியது.

"கடிதம் வந்திருக்கிறது அம்மா. இதுவந்து இரண்டு நாட்களாகின்றன. முக்கியமான செய்தி ஏதாகிலுமிருக்கப் போகிறதென்றெண்ணி எடுத்துக்கொண்டு ஓடி வந்தேன்!" என்று காளிமுத்து கூறி, அக்கடிதத்தை அவளிடம் தந்தான். அக் கடிதத்தின்மீதிருந்த கையெழுத்தைக் கண்டதும், அவள் உள்ளமும் உடலும் சிலிர்த்தன!

"அம்மா! நான் வருகிறேன்!" என்று கூறிக்கொண்டே திரும்பவும், மழையில் புகுந்து காளிமுத்து மறைந்தான்.

கையெழுத்தை விரைக்க விரைக்கப் பார்த்தாள்! ஆம், அதே கையெழுத்துத்தான்! அன்று தீயில் போட்டுப் பொசுக்கிய அதே கையெழுத்துத்தான்! இன்பத் தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்த கன்னியின் உள்ளத்தில் கடும்புயலை எழுப்பிய அதே தான்! ஐயமில்லை! திரும்பத்திரும்பப் பார்த்தாள். அதனை எடுத்துக்கொண்டு அத்தானிருந்த அறையினுள் நுழைந்து "அத்தான் கடிதம்" என்றாள். அவன் இவ்வுலகத்திலா இருந்தான் அவள் கூறியதைக் கேட்க? கலைஞன் தனியொரு உலகில் அல்லவா சஞ்சரித்துக்கொண்டிருந்தான்!

மௌனமாக வேணி அறையை விட்டு வெளியே வந்தாள். மறுபடியும் மறுபடியும் அவள் அக்கையெழுத்தையே பார்த்தாள். அவள் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் எழுந்து தலைவிரித்தாடின. "இரகசியம்! இரகசியம்" அவள் வாய் முணுமுணுத்தது. "என் அமைதியைப் பாழாக்கவந்த இரகசியம்!" என்று வாய்விட்டு வார்த்தைகளை உதிர்த்தாள். தன் அறையில் சென்று உட்கார்ந்தாள்! யோசித்தாள். நீண்ட நேரம் யோசித்தாள். கடைசியில் ஒரு முடிவிற்கு வந்தாள்.

அக்கடிதத்தின் உறையைக் கிழிக்க ஆரம்பித்தாள். அவள் கைகள் நடுங்கின. தைரியங் கொண்டு கிழித்தேவிட்டாள் உள்ளிருந்த கடிதத்தை எடுத்தாள். விரித்தாள். படித்தாள்!

படித்துக்கொண்டே வரும்போது, அவள் முகத்தில் பற்பல வித மாற்றங்கள் ஏற்பட்டன! வெறுப்பு, கோபம், ஆச்சரியம், ஏமாற்றம், சோகம் இன்னபிற உணர்ச்சிகள் அவள் மதிமுகத்தில் பிரதிபலித்தன!

படித்து முடித்தாள். சோர்ந்து கட்டிலில் சாய்ந்தாள். "துரோகம்! துரோகம்" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டாள்! "நானா கெடுத்தேன்? அல்ல! அல்லவே அல்ல! .....நான் ஒப்பேன்! ஆம்! நிச்சயம் இசையேன்!" ஏதேதோ பிதற்றினாள். வாடியிருந்த அழகியின் முகம் மாறிக்கொண்டே வந்தது! தெளிவான முகமும் ஒளி வீசும் கண்களும் பெற்றாள். கட்டிலை விட்டு எழுந்தாள். குமாரின் அறையை நாடி நடந்தாள்.

குமார் கலையிலேயே மெய் மறந்திருந்தான். அவளுக்கு ஆத்திரமும் அழுகையும் பீறிட்டுக்கொண்டு வந்தன. ஆவேசமான குரலில் "அத்தான்" என்றாள். அவன் பேசாதிருந்தான். அவள் தோள்களைப்பிடித்து பலமாக ஆட்டி 'துரோகம்! துரோகம்" என்று கத்தினாள்.

விழிக்க விழிக்க வேணியை அவன் பார்த்தான்!

"துரோகம்! துரோகம்!" என்றாள் திரும்பத்திரும்ப அவள்.

"துரோகம்! மனப்புயல்!" குமார் மெதுவாகக் கூறினாள்.

"அத்தான், அத்தான்! என்னைப் பாருங்கள்! நான் சொல்வதைக் கேளுங்கள்......என்ன, என்ன இன்னுமா கற்பனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்?......அய்யோ! துடிதுடித்துப் பேசுகிறேனே! சற்று கேளுங்களேன்!...அத்தான்?......" ஆத்திரத்தைவிட அழுகைதான் அவள் குரலில் மிக அதிகமாகக் கலந்திருந்தது.

குமாரின் எதிரிலிருந்த பொருள்கள் எல்லாம் ஆடி அசைந்து— அவன் கண்களுக்கு மட்டும்தான் இந்த நிலை—ஒரு நிலைக்கு வந்தன. குமார் எழுந்தான். வேணியும் எழுந்து "துரோகமா?" என்று கொஞ்சினாள்.

"துரோகமா? உனக்கா?" என்று கூறி, வேணியின் கண்களில் வழிந்த கண்ணீரைக் குமார் துடைத்தான்.

"இருவருக்குத் துரோகம்!"

நீங்கள் படித்துவிட்டீர்களா?

# "கார்ல் மார்க்ஸ்"

(ஆசிரியர்: எஸ். சதாசிவம்)

நமது நாட்டின் இன்றைய நிலைபற்றியும், இதை மாற்றியமைக்க மார்க்சீயம் எவ்வளவு அவசியமானது என்பது பற்றியும், மார்க்சீயத்தால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், வேகமும் விறுவிறுப்பும் கொண்ட தமிழ் நடையில் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றது. அரசியல் தலைவர்கள் முதல் சாதாரண பாட்டாளிகள் வரையில் அனைவரும் படிக்கவேண்டிய முக்கியமான புத்தகம்.

விலை ரூ. 1—0—0 தபாலில் ரூ. 1—2—0

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு

**பகுத்தறிவுப் பாசறை,**

147, பவழக்காரத் தெரு, : : சென்னை 1.

"என்ன? இருவருக்கா?"

"ஆமாம், அத்தான். எனக்கும் என் சகோதரியான மற்றொருவளுக்கும்!"

"பித்தம் கொண்டவளைப்போல ஏதேதோ பேசுகிறாயே, வேணி!"

"நானா ஏதேதோ பேசுகிறேன்? ......இதனைப் பாருங்கள்!" என்று தன் கையிலிருந்த கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

கருநாகத்தைக் கண்டவன்கூட அவ்வளவு அலறியிருக்கமாட்டான், அதனைவிட இன்னும் அதிகமாக அலறினான் அக்கடிதத்தைக் கண்டதும் குமார்.

"இது எப்படி உன்னிடம் கிடைத்தது?" அதிகாரமும் கோபமும் கலந்த குரலில் குமார் வினவினான்.

"காளிமுத்து தந்தான்!" சாந்தமாக பதிலளித்தாள் வேணி.

இருவரும் சிறிது நேரம் மௌனமாக விருந்தார்கள்.

"அத்தான்! ஆபத்து!"

"ஆபத்தா? யாருக்கு?"

"இதனைப் படித்துப் பாருங்கள்!" என்று கூறி நடுங்கும் கரத்தோடு கடிதத்தை அவனிடம் தந்தாள். அதனைத் தரையில் வீசியெறிந்தான் குமார், "துரோகம்" அவனும் கூறினான் வெறுப்போடு.

தரையில் வீழ்ந்த கடிதத்தை விரைவாக எடுத்து அவனிடம்தந்து வாசித்துப்பார்க்கும்படி மன்றாடினாள். மறுத்தான்! அழுதாள்! கெஞ்சினாள்! இசைந்தான்! மேற்போக்காக ஒப்புக்கு அதனைப் பார்த்தான். "விஷம்" என்ற வார்த்தை அவன் கண்ணில் பட்டதும், திடுக்கிட்டு அப்பதத்தை உற்றுப் பார்த்தான். ஆம், விஷம் தான்! அவன் உள்ளம் குலுங்கியது.

"விஷம்!" உறுதியான குரலில் மெதுவாகக் கூறினான்.

"ஆமாம் ஆமாம் விஷமேதான்! ..விரைவாகப் படியுங்கள்" என்று அவசரப்படுத்தினாள் வேணி.

கடிதத்தை நன்றாக விரித்துப் பிடித்துக்கொண்டு, ஆரம்பத்திலிருந்து, தன் விழிகளால் வார்த்தைகளை உண்ணத் தொடங்கினான், குமார்!

(தொடரும்)

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறழ்ச்சி என்றெண்ணி! ஆனால் வெட்கமும் துக்கமும் ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு வந்தபோதிலும் உண்மையைச் சொல்லாமல் இருக்கவோ நம்மால் முடியவில்லை.

பாட்னாவுக்கருகே சிங்பூம் என்ற ஊரில் போலீசார் ஐ. பி. சி. 381, 411, 120 முதலிய பிரிவுகளின்படி குற்றம் இழைத்ததாக ஒரு பரமானந்தம் என்பவர் மீதும் மற்றும் சிலர் மீதும் சிங்பூம் "மாஜிஸ்ட்ரேட் கோர்ட்"டில் வழக்கு தொடுக்கப்பட்டது. பரமானந்தம் பாட்னா பிரதம மந்திரிக்கு மிக வேண்டியவராம். எனவே பாட்னா பிரதமர் தன் பார்லிமென்டரி செக்ரடரி மூலமாக வழக்கை ஒத்திப் போடும்படியாக "செய்தி" அனுப்பினாராம். வழக்கு அதன்படி ஒத்திப் போடப்பட்டு பிறகு வாபீஸ் வாங்கிக் கொள்ள வேண்டிய நிலைக்கும் வந்துவிட்டதாம். சர்க்காரின் கட்டளைக் கிணங்க மாஜிஸ்ட்ரேட் வழக்கை வாபீஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார். வேறு விதத்திலே சொல்வதானால் நீதிதேவன் மயங்கிவிட்டார் சர்க்காரின் கட்டளையைக் கண்டு!

பாட்னா ஹைகோர்ட் தலைமை நீதிபதி **ஜஸ்டிஸ் அகர்வாலா**விடம் மாஜிஸ்ட்ரேடின் நடவடிக்கையை எதிர்த்து போலீசார் அப்பீல் செய்துகொண்டனர். அப்பீல் விசாரணையின்போது **ஜஸ்டிஸ் அகர்வாலா**, கோர்ட் விவகாரத்தில் தலையிட்டு வழக்கை வாபீஸ் பெறும்படி கூறுவதற்கு சர்க்காருக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்பதை அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட்டுவிட்டு, இனியேனும் சர்க்கார் இதுபோல முறைகேடான வழிகளில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையிட்டு தங்கள் நற்பெயரைக் கெடுத்துக் கொள்ளாதிருக்கவேண்டும் என்று சர்க்காருக்கும், கோர்ட்டில் நடந்துகொண்டிருக்கும் வழக்கை வாபீஸ் பெறும்படி உத்தரவிட சர்க்காருக்கு அதிகாரம் கிடையாது ஆகவே அதிகாரமில்லாத விஷயத்தில் சர்க்காரின் சொற்படி நடந்து கொண்டது தவறு—அது நீதிமுறைக்குப் புறம்பானது என்று மாஜிஸ்ட்ரேட்டுக்கும் எச்சரிக்கை செய்திருக்கிறார்.

எச்சரிக்கை செய்ததோடு தன் கடமை தீர்ந்துவிட்டது என்று எண்ணி ஓய்ந்திருக்கவில்லை ஜஸ்டிஸ் அகர்வாலா, அடுத்தாற்போல் நடைபெற்ற பீகார் நீதிமன்ற அலுவலர்கள் மாநாட்டில் இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை எடுத்துக் காட்டிவிட்டு, இது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி நாட்டிலே நடைபெறுதிருக்க வேண்டுமானால், நீதிக்கும் சர்க்கார் நிர்வாகத்திற்கும் இடையே உள்ள தொடர்பு உடனடியாக கத்தரிக்கப்பட்டாகவேண்டும் என்றும் ஆய்வுரை வழங்கியுள்ளார்.

இந்த நீதி நிர்வாகப் பிரிவினைக் கோரிக்கை புதியதல்ல, ஜஸ்டிஸ் அகர்வாலா தானே கண்டுபிடித்துக்கூறிய அற்புத சித்தாந்தமல்ல, உரிமைப் போரில் ஈடுபட்ட உத்தமர்கள் அத்தனைபேரும் நீதி—நிர்வாகம் இரண்டுக்கும் நடுவே உள்ள பிணைப்பு அறுபட்டுத்தீர வேண்டும் என்று பற்பல ஆண்டுகளாகவே கூறிவந்துள்ளனர். குறிப்பாக காங்கிரஸ் தலைவர்கள் எல்லோரும் இதே கருத்தையே கொண்டிருந்தனர். அவர்களுடைய கட்சி, பலமுறை, வெள்ளை சர்க்கார இந்தப் பிரிவினையை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவராததற்குக் காரணம் இந்திய அரசியல் எழுச்சியை அடக்குவதற்கு ஒரு கருவியாக சட்டத்தையும் நீதிமன்றத்தையும் அவர்கள் பயன்படுத்த எண்ணுவதுதானே தவிர வேறில்லை என்று உரத்த குரலில் உலகறிய முழக்கமிட்டிருக்கிறது. ஆனால் இன்று அதிகாரம் காங்கிரஸ் சர்க்காரிடம் வந்து ஓர் ஆண்டுக்கு மேல் ஆகியும்கூட நீதி நிர்வாகப் பிரிவினை அமுலுக்கு வரவில்லை. அமுலுக்கு வராதது மட்டுமல்ல, இந்த சர்க்காருக்கு அந்தப் பிரிவினை பற்றிய உற்சாகமோ, அந்தப் பிரிவினை தேவைதான் என்பதில் காட்டப்படவேண்டிய நியாயமான அக்கறையோகூட இருப்பதாகவே தெரியவில்லை.

"ஏன், என்ன காரணம்? 1947 ஆகஸ்டு 15க்கு முன்னால் அவ்வளவு அவசியமாகக் காணப்பட்ட ஒரு திட்டம் ஏன் இன்று அடியோடு கைவிடப்பட்டுவிட்டது? அதுவும் யார் யார் துடி

(12-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கம் தொடர்ச்சி)

சென்னையில்மட்டுமல்ல, பெஜவாடாவில் விசாகப்பட்டினத்தில் மலையாளத்தில் கன்னட நாட்டில் பம்பாய் நகரத்தில் மஹாராஷ்டிரப் பகுதிகளில் குஜரத் பட்டினங்களில், பல இடங்களில், பற்பல இடங்களில் நடைபெற்றிருக்கிறது.

ஒரு நாள் அல்ல, இரு நாள் அல்ல, நான்கு மாதங்கள்—கணக்காகச் சொல்வதானால் நான்கு மாதங்களும் இருபது நாட்களும் நடைபெற்றிருக்கிறது இந்த நாடகம்! நான்கு மாதங்கள் ஓயாது நடந்து, ஓய்ந்து முடிந்துவிட்டது நாடகம் சென்ற கிழமை!

ஜூலை 19-ல் நாடகம் துவக்கப்பட்டது. நாடகம் முடிந்ததேதி டிசம்பர் 10. இடையே இருப்பன 140 நாட்கள். ஆம்! நூற்று நாற்பது நாட்கள் அலுப்புச் சலிப்பின்றி ஒரே நாடகத்தை நடத்திக் காட்டியிருக்கின்றனர் அதன் சூத்திரதாரிகள்!

நாம் விளையாட்டிற்கோ விபரீதத்திற்கோ உவமான அழகுக்கோ உவமேயச் சிறப்பிற்கோ கூறவில்லை உண்மையாகவேதான் கூறுகிறோம், நாடகம் என்பதன் முழுப்பொருளையும் நன்றாக அறிந்துதான் கூறுகிறோம், இந்த மொழிவழி மாகாணப் பிரிவினைக் கமிஷன் வெறும் நாடகம்!

"பிரிட்டிஷார் நாடாள்வதற்கு எளிதாக இருக்க வேண்டும் என்ற ஒரு அளவுகோலைத் தவிர வேறு எந்த அளவுகோலுமின்றி இந்தியாவைப் பல மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள்—இந்தப் பிரிவினை சரியானது அன்று—மொழி, அந்த மொழிவழி அமைந்த கலை, கலையின் திறத்தாலும் சூழ்நிலைப் பக்குவத்தாலும் உருவாக்கப்பட்டுள்ள கலாசாரம், இதன் விளைவான நாகரிகம் என்னும் இந்த அளவுகோல்களை வைத்து மாகாணங்களின் எல்லை வகுக்கப்படவேண்டும்—பொதுவாக, தனித்தனி மொழி பேசும் வட்டாரங்கள் தனித்தனி மாகாணங்களாக அமையவேண்டும்—இத்தகு அமைப்பே அந்தந்த மாகாணங்களின் வளர்ச்சிக்கு ஏற்றது" என்னும் கருத்து நாட்டிலே நீண்ட நாட்களாக உலவிவருகிறது. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் சிறு கொடியென காங்கிரஸ் மரத்தைச் சுற்றிப் படர்ந்து கிடந்த இப்பிரச்சினை வளர்ந்து வளர்ந்து பெருகிப் பெருகிப் படர்ந்து படர்ந்து அடர்ந்து தழைத்து இன்று இந்தியக் காடு முழுவதும் சூழ்ந்து கிடக்கிறது. குறிப்பாக ஆந்திரர்கள் மலையாளிகள் கன்னடர்கள் குஜராத்திகள் மராட்டியர்கள் ஆகியோர் தத்தமக்கு தனி மாகாணங்கள் கேட்டவண்ணம் உள்ளனர். அதிலும் ஆந்திர மாகாணக்கோரிக்கை மிகவும் பலமுள்ளதாகவும், ஆந்திரர்கள் அனைவரும் முழு மனதுடன் விரும்பி வேண்டும் தன்மையதாகவும், மிக வளர்ந்த வயதுவந்த பிரச்சினையாகவும் ஆகிவிட்டது. இந் நிலையிலேதான் ஜவஹர் சர்க்கார் எஸ். கே. தார், பன்னாலால், ஜகத் நாராயண் லால், பி. சி. பானர்ஜி என்னும் "**நால்வர் குழு**"வை அமைத்து, 1. என்னென்ன புது மாகாணங்கள் இந்தியாவில் ஏற்படவேண்டும்—அவற்றின் எல்லைக் கோடுகள் எங்கெங்கு செல்லவேண்டும்? 2. அப்படி அமைக்கப்படும் புதிய மாகாணங்கள் ஒவ்வொன்றின் பொருளாதார, அரசியல், நிர்வாக, ஏனைய விளைவுகள் எத் தன்மையனவாக இருக்கும்? 3. இப் புது மாகாணங்களின் தோற்றத்தால் பிற மாகாணங்கள் எப்படி பாதிக்கப்படும்? என்னும் இந்த மூன்று கேள்விகளின் அடிப்படையில் நாட்டில் விரிவான விசாரணையை நடத்தி, அதன் விளைவாகக் கிடைக்கும் விவரங்களைக் கொண்டு தக்க முடிவுகளைத் தருமாறு ஆணையிட்டது. அதற்கேற்ப இந்த ஆய்வு குழுவினரும் நாடெங்கும் சுற்றி, நான்கு திக்கிலுமுள்ள நால் வேறு கருத்துடைய தலைவர்களையும் அறிஞர்களையும் கண்டு பேசி, பல்வேறுபட்ட எண்ணங்களையும் விவரங்களையும் அலசி ஆராய்ந்து, கருத்துரைகளைத் தொகுத்துக் கொண்டு வந்தனர்—அல்ல! அல்ல!—தொகுத்துவருவதாகப் பாவனை செய்தனர்! தனித் தமிழிலே கூறுவதானால், நடித்து வந்தனர்! அவர்கள் உண்மையாகவேதான் கருத்துரைகளைத் தொகுத்து வருகின்றனர் என்று அப்போது நம்பினோம்—அவர்கள் பற்பல தலைவர்களைக் கண்டு பேசி கருத்துக்களை உசாவியது அந்த எண்ணத்தை அன்று நமக்கு ஊட்டியது—ஆனால் இன்று உணர்கிறோம் அவ்வளவும் வெறும் நய வஞ்சகம் என்பதை! அவர்கள் விசாரணை செய்யவில்லை—விசாரணை செய்வதாக நடித்தார்கள்! அறிஞர்தம் இதய ஓடை ஆழ நீர் தன்னை மொண்டு செறிதர ஊற்றி ஊற்றிப் பருகவில்லை—பருகுவதுபோல் பாவனை மந்திரம் பல படக் காட்டினார்கள்! தலைவர்களை அழைத்து மொழி வழி மாகாண அமைப்புபற்றி உம் எண்ணம் என்ன என்று வரிசை வரிசையாக வினவியபோது உண்மை ஆராய்ச்சியே இது என்றெண்ணினோம் இன்றோ அவ்வளவும் நடிப்பு என அறிந்து மனம் கவல்கிறோம். செ! பொது வாழ்க்கையில் இவ்வளவு பொய்ம்மையா! ஒரு பெரிய உபகண்டத்தை ஆளும் ஒருபலம் பொருந்திய சர்க்காரால் அமைக்கப்படும் ஒரு குழு நாடெங்கும் பவனி வருகிறது, நல்லோர் பலரைக் காண்கிறது, அறிஞர்கள்—ஆராய்ச்சியாளர்கள்—அரசியல் தலைவர்கள்—இலக்கிய சிங்கங்கள்—அலுவல் வேந்தர்கள்—பத்திரிகை ஆசிரியர்கள் அத்தனை பேருடனும் ஆராய்ச்சி நடத்துகிறது, நான்கு மாதங்கள் இப்படி ஆராய்ச்சி நடத்திவிட்டு ஊருக்குத் திரும்புகிறது, அறிக்கைவிடுகிறது—இவ்வளவும் வெறும் நாடகம் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக நடிக்கப்பட்ட நாடகம் என்று சொன்னால் "எழில் உள்ள இந்தியாவே! நீ எடுப்பார் கைப் பிள்ளை ஆனாயே!" என்று அந்த இத்தாலி நாட்டுக் கவிஞன் **தாந்தே**யைப் போல இந்திய அரசியலின் வீழ்ச்சி கருதி இரத்தக் கண்ணீர் வடிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் நாம்!

மொழிவழி மாகாண ஆய்வு குழுவினரின் அறிக்கையைக் கண்டதுமே நமக்கு நன்றாகப் புலப்பட்டுவிட்டது இவர்கள் இவ்வளவு நாட்களும் விசாரணை நடத்தவில்லை—மக்களை, மக்கள் தலைவர்களை விசாரிப்பது போல நடித்து ஏமாற்றி வந்தனர் என்பது! இல்லையானால் விசாரித்தறிந்த கருத்துரைகளுக்கும் காட்டப்பட்ட அபாய அறிகுறிகளுக்கும் அளிக்கப்பட்ட புள்ளி விவரங்களுக்கும் எடுத்து உரைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினை நுணுக்கங்களுக்கும் சற்றேனும் தொடர்பற்ற, இவர்கள் உள்ளம் ஒன்றினுக்கு மட்டுமே திருப்தி தரக்கூடிய அறிக்கை ஒன்றினைப் பிறப்பிப்பார்களா இந்த ஆய்வு குழுவினர்?

இந்த ஆய்வு குழுவினரின் அறிக்கையை தும்புதூசு விலக்கி அப்பு அழுக்குகளை அகற்றி சுண்டக் காய்ச்சி வடித்து எடுத்து இறுத்து வார்த்தால் வரும் பொருள் இந்த மூன்றே வாக்கியங்களில் முடங்கிக் கிடக்கிறது:

"இந்தியா ஒன்று" என்ற எண்ணத்தை பலப்படுத்துவதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ

செய்யமுடியுமோ அவ்வளவையும் செய்வதும் அந்த எண்ணத்தை அழிக்கும் அல்லது குறைக்கும் செயல் எதுவாக இருந்தாலும் அதனைத் தவிர்ப்பதுமே இன்றையதினம் ஒரு தேசிய இந்தியனுக்குள்ள கடமை. இந்தக் கடமை எனும் ஒரே உரைகல்லைக் கொண்டுதான் எந்தப் பிரச்சினையையும்—அந்தப் பிரச்சினை எதுவாக இருந்தாலும் சரி—நாம் அணுக முடியும். மொழிவழி மாகாணக் கோரிக்கையை இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால் அது இப்போது, இப்போதென்ன, எப்போதும் தேவையில்லை என்பது தெற்றென விளங்கிவிடும்.

இதுதான் இந்த ஆய்வுகுழுவின் அற்புதக் கண்டுபிடிப்பு. இந்தக் கண்டு பிடிப்பு சரியா அல்லவா என்பதல்ல நம கேள்வி—அதைப்பற்றிப் பிறகு ஆலோசிப்போம்—இப்போது நாம் கேட்க விரும்புவது இதைச் சொல்வதற்கு ஒரு ஆய்வுகுழு தேவையா என்பதுதான். "மொழிவழி மாகாணங்கள் புதியதாகப் பல ஏற்படுமானல் அதனல் ஏக இந்தியா என்ற தத்துவத்திற்குக் கெடுதி ஏற்படும்" என்று சொல்வதற்கு ஓர் ஆய்வுகுழு ஏன்? அந்தக் குழு நாடெங்கும் அழகுபவனி வருவது ஏன்? ஊரெங்கும் சென்று உத்தமர்களைக் கண்டு ஆந்திர மாகாணத்திற்கு எல்லை எதுவாக இருக்கவேண்டும், மகராஷ்டிரத்தின் பகுதிகளாக எவை எவை இருக்கலாம், குஜராத் மாகாணம் தனியாக ஏற்படுவது நல்லதா பம்பாயிலேயே இருப்பது நல்லதா, கன்னடமும் கேரளமும் தன் வாழ்வு நடத்த முடியுமா, சென்னை நகரம் யாருக்குச் சொந்தம் என்பனபோன்ற பிரச்சினைகளை அலசிப் பார்த்து ஆய்வுரை கேட்டது ஏன்? **மொழிவழி மாகாணங்கள் அமைவதே இந்தியாவுக்குக் கெடுதி** என்பது இந்த ஆய்வுகுழுவின் கருத்தானல் எந்தெந்த மொழிவழி மாகாணங்கள் எப்படி எப்படி அமையவேண்டும்—அவற்றின் எல்லைக்கோடுகள் எங்கிருந்து தோன்றி எப்படி எப்படிச் செல்லவேண்டும்—அவற்றின் தலைநகரம் எதுவாக இருக்கவேண்டும் துறைமுகப் பட்டினம் எதுவாக இருக்கவேண்டும்—எந்தெந்தத் தலைவர்கள் இவைபற்றி எப்படி எப்படிக் கருதுகின்றனர்—அமையவேண்டிய எல்லைக் கோடுகளைப் பற்றி யார் யார், ஏன் வெவ்வேறு கருத்துகளைக் கொள்கின்றனர் என்றெல்லாம் ஏன் இந்தக் குழுவினர் பல திறக் கருத்துடையாரையும் குடைந்து குடைந்து அவர்தம் அரிய நேரத்தையும் சிறந்த உழைப்பையும் ஆழ்ந்த கருத்தையும் பாழ்படுத்தியிருக்கவேண்டும்?

சில நாட்களுக்கு முன்னல் இந்த ஆய்வு குழுவினரிலே ஒருவர், "தங்களுக்குத் தெரிந்துள்ள எல்லா உண்மைகளையும் கருத்துக்களையும் எங்களிடத்தில் ஒளியாது உரைக்கவேண்டும் என்ற உண்மை உணர்ச்சி நாங்கள் சென்று கண்டு பேசிய எல்லோரிடத்திலும் நிறைந்திருக்கக் கண்டோம். ஆகவேதான் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பொது மக்கள் கொண்டுள்ள மனப்போக்கைப் பிரதிபலிக்கும் கருத்துத் தொகுப்புகள் அவ்வளவும் எங்களிடத்தில் இதுபோது ஏராளமாகக் குவிந்துகிடக்கின்றன" என்று குறிப்பிட்டிருந்தார். ஆம்! அவர் குறிப்பிட்டிருக்கும் இந்தச் செய்தி முழுவதும் உண்மை! தங்கட்குத் தெரிந்துள்ள எல்லா உண்மைகளையும் இந்த ஆய்வு குழுவினரிடம் ஒளியாது உரைத்துவிட வேண்டுமென்ற **உண்மை உணர்ச்சி** எல்லாரிடமும் நிறைந்துதான் இருந்தது. ஆய்வு குழுவினர் சென்ற திக்குதோறும் அவர்கட்கு நல்ல வரவேற்பு இருந்தது. அவர்களிடம் உள்ளம் திறந்து பேசவேண்டும் என்ற உண்மை உணர்ச்சி அவர்களிடம் ஆய்வுரை வழங்க வந்த அனைவருக்கும் ஏற்பட்டது. எல்லைப் பிரச்சினை குறித்தும் குடிமதிப்பு எண்ணிக்கை குறித்தும் மொழிவழி மாகாணம் பற்றியும் ஒவ்வொருவரும் கவலையோடு, பொறுப்புணர்ச்சியோடு ஆழ்ந்தசிந்தனையோடு, தக்க முறையிலேயே ஆய்வு குழுவினரிடம் தத்தம் ஆலோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர். அவர்களின் சிந்தனைத் தூய்மைக்கும் கருத்துத் தெளிவுக்கும் உண்மை உணர்ச்சிக்கும் உற்ற காரணம் இந்த ஆய்வு குழுவினரின் விசாரணைகள் உண்மை விசாரணைகளே என்று அவர்கள் நம்பியதுதான். விசாரணைகளின் விளைவாகக் கிடைக்கும் நல்ல முடிபுகள் எத்தன்மையனவே ஆயினும், இந்த முடிபுகள் மொழி வழி மாகாணங்கள் அமையவேண்டியது அவசியம், அவசரம், உடனடித் தேவை என்பதாக ஏற்பட்டாலும்கூட, விசாரணைக்குப் பிறகு, "**மொழி வழி மாகாணங்கள் தீங்கானவை**" என்றே சொல்லித் தீரவேண்டிய சங்கடமான நிலையில் இந்த ஆய்வு குழுவினர் சிக்கிக் கொண்டுள்ளனர் என்று இப்போது தெரிந்துள்ளதைப்போல அப்போதே தெரிந்திருந்தால் இந்த ஆய்வு குழுவினரின் விசாரணை நாடகங்களைக் கண்டு களிக்க எவருமே முன்வந்திருக்கமாட்டார்கள் என்பது சிலைமேல் எழுத்துப்போன்ற உறுதிபடைத்த உண்மை ஆகும்.

"அட அப்பாவிகளே! நாங்கள் ஏதோ உண்மையாகவே மொழிவழி மாகாணங்களை அமைப்பதுபற்றி விசாரணை செய்வதாக எண்ணிக்கொண்டு எங்களிடம் வந்து சாட்சியம் சொன்ன வண்ணம் இருக்கிறீர்களே! உங்கள் கண்கள் காணவில்லையா எங்கள் கைகள் கட்டுண்டு கிடக்கும் காட்சியை! உங்கள் செவிகளில் புகவில்லையா ஜவஹர் சர்க்கார் ஜாக்கிரதை ஜாக்கிரதை மொழிவாரி மாகாணங்கள் வேண்டும் என்று சொல்லிவிட்ட் போகிறீர்கள் என்று இரகசிய மொழிகளில் எங்களை அடிக்கடி எச்சரித்துக்கொண்டிருக்கும் சத்தம்! உங்களுடைய உள்ளம் உணரவில்லையா எங்களுடைய இக்கட்டான நிலைமையை! நீங்கள் என்ன சொன்னல் என்ன? நாங்கள் மொழிவழி மாகாணங்கள் கூடாது என்றுதானே சொல்லப்போகிறோம்? ஏன் இப்படி மூச்சடைக்க வந்து எங்களிடம் ஓயாது பேசிக்கொண்டிருக்கிறீர்கள்! ஐயோ பாவம் எங்கள் விசாரணை நாடகத்தை உண்மை என்றே எண்ணிக் கொண்டுவிட்டீர்களே! செ! செ! இவ்வளவு பித்துக்குளிகளாகவா இருப்பீர்கள் நீங்கள்?" என்று ஆய்வு குழுவினர் தம்மிடம் ஆய்வுரை வழங்க வந்தாரிடம் வாய் திறந்து சொல்லவில்லை! மெய்தான்! ஆனல் அவர்கள் சொன்னதையெல்லாம்விட இந்தச் "சொல்லாதது" தான் மிக மிக முக்கியம், அவர்களுடைய மாகாண அமைப்பு விசாரணை நாடகத்தில்!

சொல்லவில்லை, நாங்கள் செய்வதெல்லாம் தனி மாகாணக் கோரிக்கைக்காரர்களை ஏமாற்றுவதற்காக நடத்திக்காட்டும் கண்கட்டு வித்தை என்பதை அவர்கள் சொல்லவில்லை! எங்களுடைய எழுத்தும் சொல்லும் பேச்சும் செயலும் சர்க்காரிடமிருந்து இரவல் பெற்ற கார்பன் காபி என்பதை அவர்கள் சொல்லவில்லை! சர்க்கார் சொன்னதைச் சொல்லும் கிளிப்

(2-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கம் தொடர்ச்சி)

துடிக்கும் ஆவலோடு, கட்டுக்கு மீறிய உற்சாகத்தோடு நீதி நிர்வாகப் பிரிவினை தேவை என்று முழக்கமிட்டார்களோ அவர்களே, அவர்களிடத்திலேயே அந்தப் பிரிவினையை எளிதில் செய்யக்கூடிய அதிகாரம் வந்துங்கூட, ஏன் இன்று அதில் உற்சாகம் காட்ட மறுக்கிருர்கள்?"

கேட்கிருர் ஜஸ்டிஸ் அகர்வாலா கேட்பதோடில்லை, அதற்கு விடையும் தருகிருர். அகர்வாலா அழகாகக் கூறுகிருர்.

"நீதி நிர்வாகப் பிரிவினை தேவை என்று அண்டம் அதிர முழக்கமிட்டவர்கள் இன்று அதுபற்றி அக்கறை காட்ட மறுப்பதற்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கமுடியும். அதை நான் முன்னரே கூறியிருக்கிறேன். இப்போது வேண்டுமானுல் மீண்டும் கூறுகிறேன். அதிகார போதை அவர்களை மயக்கிக் கெடுத்துவிட்டது ஆம், அதுதான் உண்மையான காரணம்!"

அதிகார போதையின் காரணமாகத்தான் காங்கிரஸ் நீதியையும் நிர்வாகத்தையும் பிரிக்க மறுக்கிறது, உண்மையான நியாயத்தை ஊரில் உலவவிடாது தடை பல விடத்துகிறது. எந்தக் காரணத்திற்காக பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியாவில் கோல் ஓச்சியபோது நீதியையும் நிர்வாகத்தையும் பிரிக்க மறுத்ததோ அதே காரணத்தால் தான் இன்றைய காங்கிரஸ் சர்க்காரும் பிரிக்க மறுக்கிறது. ஊரில் உரிமைக் குரலை ஒடுக்குவது எளிது இரண்டும் ஒன்ருக இருந்தால்! இதை இந்த ஓராண்டு காலத்தில் காங்கிரஸ் அனுபவவாயிலாக அறிந்துகொண்டுவிட்டது. எனவேதான் காங்கிரஸ் பிரிவினைக்கு இசைய மறுக்கிறது, ஏதேதோ சாக்குப்போக்குகள் கூறி காலம் கடத்த விழைகிறது. ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவுவதில் வியப்பென்ன இருக்கிறது?

* * *

ருசிகண்ட பூனை உறியை உறியைத் தாவுவதில் வியப்பில்லாமல் இருக்கலாம் ஆனுல் தத்தித் தளர் நடை நடக்கும் பச்சிளங்குழந்தைக்குரிய பால் பறிபோகாமல் இருக்க வேண்டுமானுல் பால் கிண்ணம் வைக்கப்பட்டுள்ள உறி பூனைக்கு எட்டாத உயரத்தில் இருப்பது மிகவும் அவசியம் அப்படியின்றி உறி பூனைக்கு எட்டும் விதத்திலேயும் பூனை எத்தகைய சங்கடமுமின்றி உறியிலிருக்கும் பாலை உறிஞ்ச வசதி இருக்கும் படியாகவும் அமைக்கப்பட்டிருந்தால் பால், கிண்ணத்தில் துளியும் இராது. குழந்தை பசியால் துடிக்கும்போது குடிக்கப் பாலின்றி கோ வெனக் கதற நேரிடும். எனவேதான் நாம் கூறுகிறோம் பூனைக்கும் உறிக்கும் உள்ள தொடர்பு அறுபடவேண்டுமென்று! பூனை—சர்க்கார்! உறி—நீதிமன்றம்! பால்—உரிமை! குழந்தை—ஜனநாயகம்! உவமான உவமேய விளக்கம் இது! சர்க்கார் பூனைக்கும் நீதிமன்ற உறிக்கும் தொடர்பு அறுபடாவிட்டால் உரிமைப்பால் இன்றி ஜனநாயகக் குழந்தை கதறி அழத்தான் நேரிடும். உறிமீது வைக்கப்பட்டிருக்கும் பால்கிண்ணம் போன்றவர்கள் நீதி தேவர்கள்! தன்னிடமிருக்கும் உரிமைப் பால் சர்க்கார்பூனைகளால் உறிஞ்சப்படும்போது கிண்ணம் என்ன செய்யமுடியும்—பார்த்துக்கொண்டிருப்பதைத் தவிர! பூனையின் வஞ்சனையைத் தடுக்கவா முடியும் கிண்ணத்தால்! நீதிதேவன் மயக்கம் நாட்டிலே அடிக்கடி நடைபெறுவதற்குக் காரணம் இதுதான். இந்த மயக்கம் நடந்துகொண்டேதான் இருக்கும் பூனை—உறி தொடர்பு அறுபடும்வரை! அந்தத் தொடர்பு அறுபடாதவரை ஜனநாயகக் குழந்தையும் உரிமைப்பாலின்றி அழுதுகொண்டுதான் இருக்கும்! அந்தத் தொடர்பு விரைவில் அறுபடும் என்பதற்கான அறிகுறிகள் ஏதும் காணேம். இந்திய அரசியல் நகல் திட்டத்திலாவது மூன்ருண்டுகளுக்குள் ஒவ்வொரு மாகாணமும் நீதி நிர்வாகப் பிரிவினையை செய்தே தீரவேண்டும் என்னும் ஓர் சட்டப் பிரிவு இருந்தது. ஆனுல் அந்த நகல் திட்டம் அசல் சட்டமாக மாறியபோது அந்த "மூன்ருண்டுக்குள்" என்ற சொல்லும் நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே எப்போதாவது மத்திய, மாகாண சர்க்கார்கள் பெரிய மனதுவைத்து பிரிவினைத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தால் உண்டு. இல்லையேல் கிளர்ச்சிப் புயல் சர்க்காரை மடக்கி நிறுத்தி இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும்படி உலுக்கினுலும் பயன் விளையும். ஆனுல் இந்த இரண்டிலே எதுவும் விரைவில் நடக்கும் என்ற நம்பிக்கை நமக்குச் சிறிதும் இல்லை.


## பாசறை வெளியீடுகள்!

பெரியார்

புதியதோர் உலகு செய்வோம் 0 6 சித்திரபுத்திரன் எழுதுகிருர் 0 6

இளஞ்செழியன்

தமிழன் தொடுத்த போர் 1 12 திராவிடஸ்தான் வேண்டாமா 0 8

ஈரோட்டுப் பாதை 0 6

ந. சி. கந்தையா

திராவிடம் என்ருல் என்ன 0 6 ஆரியத்தால் விளைந்த கேடு 0 6

பெண்கள் போராட்டம் 0 6

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, .:: சென்னை.


Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons)